(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைத்துத் தரப்படும்?

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஒரு கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்கப்பட வேண்டுமானால் அக்கிராமத்திலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் 10,000 கால்நடை அலகுகள் இருத்தல் வேண்டும். தளவாய் கிராமத்திலும் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் 4,158 கால்நடைகளே இருப்பதால் தளவாய் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**435—**

## முகையூர் தொகுதியில் தொழில் கல்வி நிலையம் அமைத்தல்

***38112—திருமதி ஆர். சாவித்திரி அம்மாள் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, அரகண்டநல்லூர் பேரூராட்சியில் தொழில் கல்வி நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முகையூர் தொகுதி, அரகண்ட நல்லூர் பேரூராட்சியில் தொழில் கல்வி நிலையம் அமைத்துக் கொடுப்பதற்காகக் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பதினான்காம் பட்டியல்)

**1—**

## பட்டா வேண்டி விண்ணப்பித்தோர் விவரம்

**வினா எண் 15637—திரு. எம். ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—